
# காணிக்கை




காணிக்கை என்பது நாம் நம்முடைய அன்பை வெளிப்படுத்த, தேவனுக்காக அவர் நமக்கு கொடுத்ததிலிருந்து எடுத்து, அவருக்கென கொடுப்பதாகும். கர்த்தராகிய தேவன் தமது குமாரனான ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவையே, நமக்கென தந்துவிட்ட பிறகு, நாம் நம்மையே ஆண்டவருக்கு அர்ப்பணிப்பதை காட்டிலும், பெரிய காணிக்கை எதுவும் இல்லை. இதனையே ஆண்டவர் நம்மிடமும் எதிர்பார்க்கிறார். ஆகிலும் ஆண்டவர் நமக்கு இவ்வுலகில் கொடுத்திருக்கும் செல்வங்களில் இருந்து சிலவற்றை எடுத்து, ஆண்டவருக்கு படைப்பது, ஆதி காலம் முதல் தலைமுறை தலைமுறையாக நடந்து வருகிறது. காணிக்கை கொடுப்பவர்கள் எல்லாரும் ஆண்டவருக்கு பிரியமானவர்கள் என்று நாம் கூற இயலாது. ஆனால் ஆண்டவருக்கு பிரியமானவர்கள் நிச்சயமாய் அவருக்கு மேன்மையானவற்றை காணிக்கையாக படைப்பர். தேவனால் படைக்கப்பட்ட ஆதாம் ஏவாளுக்கு பிறந்த முதல் இரண்டு குமாரர்களான காயின், ஆபேல் ஆகியோரின் காணிக்கையே இதற்கு ஒரு நல்ல உதாரணம் ஆகும். ஆதி பிதாக்கள் ஆண்டவருக்கு நேரடியாக காணிக்கைகளை, பலிகளின் மூலமாக இன்னும் பல விதங்களில் செலுத்தினர். ஆனால் நியாயப்பிரமாண காலத்தில் தேவாலயத்திற்கு சென்று ஆசாரியன் மூலமாக அல்லது புதிய ஏற்பாட்டு காலத்தின்படி அப்போஸ்தலர்களிடமோ /தேவ ஊழியர்கள் மூலமாகவோ காணிக்கை செலுத்தப்பட்டது.

இங்கு இரண்டு காரியங்களை நாம் கவனிக்க வேண்டும். ஒன்று காணிக்கையை எப்படிப்பட்ட மனதோடு, எப்படிப்பட்ட ஒழுங்கோடு நாம் தேவனுக்கு செலுத்த வேண்டும் என்பது. மற்றொன்று, பெறப்படும் காணிக்கை அல்லது சேகரிக்கப்படும் காணிக்கை எப்படிப்பட்ட விதத்தில் ஆண்டவருக்கு மகிமையாக உபயோகிக்கப்பட வேண்டும் என்பது. ஏனெனில் சரியான முறையில் காணிக்கை செலுத்தப்பட்டு, அது சரியான முறையில் பயன்படுத்தப்படும் பொழுது, அது ஆண்டவருக்கு சுகந்த வாசனையாய் இருக்கும், இவற்றில் ஒன்று தவறாய் போனாலும் காணிக்கை செலுத்துவதில் பயன் இல்லாமல் போய்விடும். முதலாவது நாம் எவ்வாறு காணிக்கை கொடுக்க வேண்டும் என்பதை குறித்து சில காரியங்களை தியானிப்போம். ஒரு காலத்தில் மிருகங்களை,

பறவைகளை பலியாக செலுத்தினர். ஆனால் இன்று நாம் அப்படி செலுத்துவதில்லை, பணமாகவோ அல்லது மற்ற பொருளாகவோ நாம் செலுத்தும் காணிக்கை தரமானதாக இருக்க வேண்டும். சிலர் செல்லாத ரூபாய் நோட்டுகளையும், தரமற்ற பொருட்களையும் கொண்டுவந்து ஆலயத்தில் படைப்பதை காட்டிலும் அதை செலுத்தாமல் இருப்பதே மேல். இரண்டாவதாக, அது பரிசுத்தமானதாய், நேர்வழியில் சம்பாதிக்கப்பட்டதாயிருக்க வேண்டும். ஆண்டவர் நமக்கு தராத, நாம் குறுக்கு வழியில் ஈட்டிய எதுவும் ஆண்டவருக்கு தேவையில்லை. மூன்றாவதாக செலுத்தப்படும் காணிக்கை முழு மனதோடு ஆண்டவருக்கு என செலுத்தப்பட வேண்டும். ஆனால் சிலரோ, இன்று மன உற்சாகத்தோடு, ஊழிய தேவைகளை, ஊழியர்களின் தேவைகளை கருத்தில் கொண்டு காணிக்கை செலுத்தாமல், தங்கள் வாழ்வில் ஏதாவது நல்லது நடக்க வேண்டும் என்றோ, அல்லது காணிக்கை கொடுப்பது மூலம் தான் உலக ஆசீர்வாதங்களை மேன்மேலும் பெற முடியும் என்றோ, அல்லது செய்த பாவத்திற்கு பிராய்சித்தமாகவோ, தங்கள் செல்வ செழிப்பை பிரஸ்தாபம் பண்ணவோ, காணிக்கை செலுத்த துணிகின்றனர். மேலும் அனனியா மற்றும் சப்பீராள் போல் இருமனதோடு, ஆண்டவரையே ஏமாற்றும் விதத்தில் கொடுக்கப்படும் காணிக்கையும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஒருவேளை முழு மனதோடு நல்ல விதத்தில் ஈட்டிய பொருளில் இருந்து காணிக்கை கொடுத்தாலும், இன்றைய காலகட்டத்தில் யாருக்கு அது போய் சேர்கிறது என்பது மிக முக்கியமானதாகும். ஏனெனில், ஆண்டவருக்கு என நாம் கொடுத்தாலும் அது ஆண்டவருடைய நாமம் மகிமைக்காக உபயோகப்படுத்தப்படுமா என்பதை நாம் சிந்தித்துக் கொடுக்க வேண்டும். நம்மால் அதை முழுமையாக தெரிந்து கொள்ள முடியாவிட்டாலும் உண்மையாய் ஆண்டவருக்காக செயல்படும் ஊழியத்திற்காக, சபைக்காக, நாம் கொடுக்கிறோமோ என்பதை ஆண்டவர் தரும் ஞானத்தோடு உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இல்லையேல், நாம் சுத்த மனதோடு காணிக்கை கொடுப்பதனால், ஆண்டவர் நம்மை ஆசீர்வதித்தாலும், அந்த காணிக்கை சரியானபடி உபயோகிக்கப்பட்டதாய் இல்லாமல் போகும் பொழுது, அது ஆண்டவருக்கு வேதனையை தான் கொண்டு வரும். மேற்கண்ட காரியங்களில் நாம் எவ்வாறு காணிக்கை கொடுக்க வேண்டும் என்பதை தியானித்தோம். இப்பொழுது சேகரிக்கப்படும் காணிக்கை எவ்வாறு உபயோகப்படுத்தப்பட வேண்டும் என்பதையும் தியானிப்போம்.

ஏனெனில் இவ்வாறு சேகரிக்கப்படும் காணிக்கை சரியான விதத்தில் உபயோகப்படுத்தபடாததால், ஒரு பக்கம் ஊழிய தேவைகள் அதிகமாக இருக்க, மறுப்பக்கம் தேவையில்லாத காரியங்களுக்காய், சில தனிப்பட்ட மனிதர்களுக்காய், காணிக்கையாய் பெறப்பட்ட செல்வங்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஆண்டவருடைய கிருபையால் சில நூற்றாண்டுகளுக்கு முன்பு, பல்வேறு அயல்நாட்டு மிஷனரி ஸ்தாபனங்கள் மூலம், ஊழியர்கள் இந்தியாவிற்கு குறிப்பாக தென் இந்தியாவிற்கு, அதிலும் குறிப்பாக தமிழ்நாட்டிற்கு வந்து அருமையாய் சுவிசேஷ பணி செய்து, ஆலயங்களை ஸ்தாபித்து, கல்வி மற்றும் மருத்துவ சேவைகளையும் தந்து இன்று இத்தனை கோடி பேர் ஆண்டவரை அறிந்து கொள்ள காரணமாயினர். இதற்காக அவர்கள் ஊழிய தேவைகளை, திட்டங்களை அறிந்து தங்கள் சொந்த நாட்டிலிருந்து தியாகத்தோடு காணிக்கைகளைப் பெற்று அதன் மூலம் பல நல்ல பணிகளை செய்தனர். இத்தனை நூற்றாண்டுகளாகியும், அப்பொழுது அவர்கள் உதாரத்துவமாய் செலுத்திய காணிக்கை மூலம், கட்டப்பட்ட ஊழியங்கள், சபைகள், பள்ளிகள், மருத்துவமனைகள், கல்லூரிகள் மற்றும் ஆதரவற்றோ இல்லங்கள் என்று இன்றும் அநேகருக்கு பிரயோஜனமாய், இதைக் கண்டு இன்றும் மக்கள் ஆண்டவர் ஏற்றுக்கொள்ளும் விதமாய் அமைந்துள்ளது. இப்பொழுது நம் நாட்டு ஊழியர்கள், குறிப்பாக தமிழ்நாட்டில் உள்ள ஊழிய ஸ்தாபனங்கள், இதையே நாடு முழுவதும்

விரிவுபடுத்த வேண்டிய நிலையில் உள்ளனர். நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு, விஷ்வவாணி, இந்திய சுதேச மிஷனரி சங்கம் என்று பல சுதேச ஊழியங்களும், இன்னும் பல சபை பிரிவுகளும், இதற்கான காரியங்களை அயராது செய்து வருகின்றனர். ஒரு பக்கம் காணிக்கை அதிகமாக சேகரிக்கப்பட்டாலும், அது சரியான காரணங்களுக்காக செலவு செய்யப்படாதபடியால், எத்தனையோ இடங்களில் சரியான ஆலயமின்றி, ஊழியத்திற்கான மற்றும் ஊழியர்களின் குடும்பத்திற்கான தேவைகள் சந்திக்கப்படாமல், கிறிஸ்துவை அறியாத இடங்களுக்கு சுவிஷேசத்தை சென்று சேர்க்க முடியவில்லை.

அயல்நாட்டு மிஷனரிகளால் தென்னிந்தியாவில், குறிப்பாக தமிழ்நாட்டில், சில நூற்றாண்டுகளுக்குள் செய்யப்பட்ட ஊழியத்தை, இன்று சகல வசதிகளும், காணிக்கைகளும் இருந்தும், அதனை இந்தியா முழுவதும் கொண்டு செல்ல முடியவில்லை. இதற்கு முக்கிய காரணம், நாம் இன்று வெளிப்படையாய் காண்கிறபடி, காணிக்கையாக சேகரிக்கப்படும் பணம் பொருள் ஆகியவை தவறான முறையில் பயன்படுத்தப்படுவது ஆகும். ஒருபுறம் சிறிய தேவைகள் கூட சந்திக்கப்படாமல், எத்தனையோ இடங்களில் (தமிழ்நாடு உள்பட) சரியான ஆலயம் இல்லாமல், ஆலயம் இருந்தும் அதற்கான அடிப்படை வசதிகள் இல்லாமல், மக்கள் ஆண்டவரை ஆராதித்து வருகின்றனர். ஆனால் மற்றொருபுறமோ, கோடிக்கணக்கில் செலவு செய்து ஏற்கனவே நல்ல வசதிகளோடு இருக்கிற ஆலயத்தை, தங்கள் உலகப் பெருமையை, தங்கள் செல்வ செழிப்பை காண்பிக்க புதுப்பிக்கின்றனர். ஆனால் தாங்களே அவருடைய ஆலயம், அதை புதுப்பித்து தூய்மையாக வைக்க வேண்டும் என்பதை மறந்து விடுகின்றனர்.

மேலும் சுயாதீனமாய் சபை ஊழியம், சுவிசேஷ ஊழியம் என பல விதங்களில் ஊழியம் செய்வோர், தாங்கள் விசுவாச மக்களிடமிருந்து, அற்பணிப்போடு பெரும் உதாரணத்துவமான காணிக்கையை, தெரிந்தோ தெரியாமலோ சரியான விதத்தில் பயன்படுத்தாமல் போகின்றனர். இன்று வெறும் ஐந்து நிமிடங்கள் ஓடக்கூடிய ஒரு பாடலை தயாரிக்க எத்தனையோ லட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்யப்படுகிறது. ஆனால் அப்படி தயாரித்து வெளியிடப்படும் பாடல்களில் 25% பாடல்கள் தவிர, மற்ற அனைத்தும் தனி மனிதர்களின் பாடும் திறமைகளை, இசை திறமைகளை காட்டுவதாய் உள்ளதே தவிர மற்றபடி ஆண்டவருக்கு எவ்விதத்திலும் மகிமையை கொண்டு வருவதில்லை. ஆடம்பரமான கார்கள், பங்களாக்கள் மற்றும் இதர வசதிகள் என்று உயர்தரமாக வாழ விரும்பும் ஊழியர்கள், உண்மையில் ஆண்டவருடைய ஊழிய விரிவாக்கத்திற்கு தடை கற்களாகவே உள்ளனர். மக்களை வஞ்சித்து, உண்மையான ஊழிய தேவைகளை அவர்கள் அறிந்து கொள்ள விடாமல், தாங்கள் செய்வதே ஊழியம் என்ற பிம்பத்தை உருவாக்கி, காணிக்கை பணத்தை வீணடிக்கின்றனர். ஊழியர்கள் நல்ல நிலையில் வாழ்வதும், தங்கள் ஊழியத்தை விரிவாக்குவதும் தவறல்ல. ஆனால் அதே நேரத்தில் தங்களைப் போல ஆண்டவருடைய ஊழியத்தை செய்கிற மற்ற ஊழியர்கள், ஊழிய ஸ்தாபனங்களின் தேவைகளை அறிந்து, அதற்கான காணிக்கை பணங்களை உபயோகப்படுத்த வேண்டும்.

அப்படி இல்லாமல் ஊழியத்தை ஒரு நிறுவனம் போல் நடத்தி, அதற்கு தான் தலைவன் என்று எண்ணி, தன் தேவைகளுக்காக, தன் ஊழியத்தை பிரபலப்படுத்த, இன்றைய ஊடகங்கள் மூலமாகவும், சமூக வலைதளங்கள் மூலமாகவும், கோடிக்கணக்கான காணிக்கை பணத்தை செலவு செய்வது ஏற்புடையது அல்ல. ஒரு பக்கம் அடிப்படை தேவைகளான, உணவு, உடை, இருப்பிடம், கூட இல்லாமல் எத்தனையோ ஊழியர்களும், விசுவாசிகளும் ஆண்டவரையே, நம்பி ஒவ்வொரு நாளையும் கடந்து செல்லும் பொழுது, அதைப்பற்றிய அக்கறை ஏதும் இன்றி, சுகபோகமாய் வாழ காணிக்கை பணத்தை செலவு செய்வது ஏற்புடையது அல்ல. இதில் இன்னும் கொடுமையானது, காணிக்கை மூலமாக ஏற்படுத்தப்பட்ட சபை கட்டிடங்கள், ஊழிய ஸ்தாபனங்களை, ஊழியர்களின்

அடுத்த தலைமுறை குடும்பத்தினர், அவற்றை தங்கள் சொத்தை போல், ஏதோ நிறுவனத்தை போல் எண்ணி, அதை கைப்பற்ற நினைப்பதும், கைப்பற்றிய பிறகு பலருடைய தியாகமான காணிக்கையால் ஏற்படுத்தப்பட்ட ஊழியத்தை, சபை கட்டிடத்தை, தங்கள் இஷ்டத்திற்கு ஏற்ப நடத்த நினைப்பது, அவர்கள் பெற்றோர்கள் தியாகமாய் செய்த ஊழியங்கள் யாவையும் மறக்கடிக்க செய்கிறது.

இதனால் அநேகர் தாங்கள் ஊழியத்திற்க்கென கொடுக்கும் காணிக்கை, சரியான நோக்கங்களுக்காய் செலவு செய்யப்படுமோ என்று அஞ்சுகின்றனர். எனவே ஆண்டவர் கூறியபடி சகல ஜாதிகளுக்கும் சுவிசேஷ அறிவிக்க, அவர்களை சபையாக கூடிவரபண்ண, அதிகமான காணிக்கைகள் தேவை என்பது ஒரு புறம் இருந்தாலும், தற்பொழுது கொடுக்கப்படுகிற காணிக்கைகளை சரியாக பயன்படுத்தினாலேயே, ஓரளவுக்கு அதை அடைய இயலும் என்பதை ஊழியர்கள், ஊழிய நிறுவனங்கள், சபை மக்கள் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும். எவ்வித வசதிகள் இல்லாத, மொழி கூட தெரியாத, வாழ வசதி இல்லாத இயற்கை சூழ்நிலைகள் இருந்த பொழுதும் அர்ப்பணிப்போடு, பல மாதங்கள் கடல் கடந்து பிரயாணம் செய்து, பிறகு ஊழிய பாதையில் பல சிரமங்களை அடைந்து, அதன் மத்தியிலும் இவ்வளவு அருமையாய், குறிப்பாக தமிழ்நாடு முழுவதும் தங்கள் ஊழியத்தை செய்த, அயல்நாட்டு ஊழியர்களின் தியாகத்தையும், அவர்கள் ஊழிய நடைமுறைகளையும் இன்றைய ஊழியர்கள், ஊழிய ஸ்தாபனங்கள், சபை மக்கள் அறிந்து உணர்ந்து கொள்வார்கள் என்றால் இந்தியாவில் எழுப்புதல் விரைவில் உண்டாக்கும். எனவே சரியான நோக்கத்துடன், திட்டத்துடன், காணிக்கை செலுத்துவதும், அப்படி செலுத்தப்பட்ட காணிக்கையை சரியான முறையில் உபயோகிப்பதும், மிக மிக முக்கியமானதாகும். இதில் நாம் அசட்டையாய் இருப்போமானால், ஆண்டவர் பரமேறும் போது கூறிய, பிரதான கட்டளையை நாம் நிறைவேற்ற முடியாமல் போகும். எனவே காணிக்கை செலுத்துவதிலும், அதை பயன்படுத்துவதிலும் ஜாக்கிரதையோடு, விழிப்பாய் இருப்போமாக. அப்பொழுது அதற்கான பலனை ஆண்டவர் நமக்கு இம்மையிலும் ,மறுமையிலும் தருவார், ஆமென், அல்லேலுயா.